ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் புள்ளிவிபரத் திணைக்களம்
திகதி 05.08.2016

## மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி – 2015

1) 2015ஆம் ஆண்டிற்கான மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி, தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின்[1] தேசிய கணக்குகள் மதிப்பீடுகளின் மீளஅடிப்படைப்படுத்தப்பட்ட தொடர்களின் பிரிப்பினை அடிப்படையாகக் கொண்டு (2010இன் நிலையான விலைகளில்) இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டிருக்கிறது. மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீட்டில், மொ.உ. உற்பத்தியிலுள்ள ஒவ்வொரு நிரையிலுமுள்ள விடயத்தினதும் பெறுமதியானது (அடிப்படையாண்டு 2010) மாகாண மட்டத்தில் தொடர்பான குறிகாட்டிகளைப் பயன்படுத்தி பிரிக்கப்பட்டது.

2) 2015இல் இலங்கையின் பொருளாதாரம் 4.8 சதவீதம் கொண்ட வருடாந்த உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சியை அடைந்த வேளையில், பெயரளவு மொ.உ.உற்பத்தி ரூ.11,183 பில்லியனுக்கு 7.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மாகாணங்களுக்கிடையேயான பெயரளவு மொ.உ.உற்பத்தியின் பிரிப்பு அட்டவணை 1இல் தரப்பட்டுள்ளது.

---

1 தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் தேசிய கணக்குகளைத் திரட்டும் அடிப்படையாண்டினை 2002 இலிருந்து 2010இற்கு திருத்திக் கொண்டது. இதற்கமைய மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியினைத் திரட்டும் முறைக்கு 2016இல் பல முறையியல் மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

**அட்டவணை 1**

**மாகாணங்களின்படி பெயரளவு மொ.உ.உற்பத்தி 2014[(2)(3)] மற்றும் 2015[(3)]**

| மாகாணம் | ரூ. பில்லியன் | |
|---|---|---|
| | **2014[(2)(3)]** | **2015[(3)]** |
| மத்திய | 1,076 | 1,152 |
| கிழக்கு | 605 | 671 |
| வடமத்திய | 542 | 607 |
| வடமேல் | 1,155 | 1,224 |
| வட | 349 | 391 |
| சப்பிரகமுவ | 711 | 781 |
| தென் | 1,097 | 1,160 |
| ஊவா | 557 | 587 |
| மேல் | 4,358 | 4,611 |
| **இலங்கை** | **10,448** | **11,183** |

2. திருத்தப்பட்டது 3. தற்காலிகமானது

**மாகாண ரீதியாக மொ.உ.உற்பத்தியின் பங்குகள்**

3) முன்னைய ஆண்டுகளைப் போன்றே 2015இலும் மேல் மாகாணம் மொ.உ.உற்பத்திக்கு மிக உயர்ந்த பங்களிப்பினை வழங்கியது. எனினும், அண்மைய போக்குகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் மொ.உ.உற்பத்தியில் இதன் பங்கு 2014இன் 41.7 சதவீதத்திலிருந்து 2015இல் 41.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து பிரதேச ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்குப் பங்களித்தது. 2014இல் மொ.உ.உற்பத்திக்கு இரண்டாவது மிகப் பெரும் பங்களிப்பினைப் பதிவுசெய்த வடமேல் மாகாணம் 2015இலும் அதன் நிலைமையைப் பேணிய வேளையில், இதன் பங்கு 2014இன் 11.1 சதவீதத்திலிருந்து 2015இல் 10.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2015இல் 10.4 சதவீதம் கொண்ட மூன்றாவது மிகப் பெரும் பங்கினை தென் மாகாணம் பதிவுசெய்த வேளையில் மத்திய மாகாணத்தின் பங்களிப்பு 10.3 சதவீதத்தில் எவ்வித மாற்றமுமின்றிக் காணப்பட்டது. சப்பிரகமுவ மாகாணத்தின் பங்களிப்பு 2014இன் 6.8 சதவீதத்திலிருந்து 2015இல் 7.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. கிழக்கு, வட மத்திய மற்றும் வட மாகாணங்கள் அவற்றின் மொ.உ.உற்பத்திப் பங்களிப்புக்களை அதிகரித்த வேளையில் ஊவா மாகாணத்தின் பங்களிப்பு 2015இல் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

**வரைபடம் 1**

**ஒட்டுமொத்த மொ.உ.உற்பத்தியில் மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியின் பங்கு**




**மாகாண ரீதியாக மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சி வீதங்கள்**

4) நாட்டின் பொருளாதாரச் சூழலில் ஏற்பட்ட மேம்பாடுகளுடன் ஒத்துச்செல்லும் விதத்தில் அனைத்து மாகாணங்களும் 2015இல் 5.4 சதவீதத்திற்கும் 12.1 சதவீதத்திற்குமிடைப்பட்ட வீச்சில் பெயரளவு வளர்ச்சி வீதங்களைப் பதிவுசெய்தன. 2015இல் வட மத்திய மற்றும் வட மாகாணங்கள் பெயரளவு நியதிகளில் மிக உயர்ந்த வீதமான 12.1 சதவீதத்தினைப் பதிவுசெய்தன. மேலும், 2015இல் கிழக்கு மாகாணம் 10.9 சதவீதம் கொண்ட இரட்டை இலக்க வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்த வேளையில் சப்பிரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களின் வளர்ச்சி வீதங்கள் நாட்டின் பெயரளவு வளர்ச்சி வீதமான 7.0 சதவீதத்திலும் பார்க்க உயர்வானதாகக் காணப்பட்டன. 2015இல் மேல் மாகாணம் 5.8 சதவீதத்திற்குச் சமனான பெயரளவு வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்ததுடன் ஊவா மாகாணத்தில் 5.4 சதவீதம் கொண்ட வளர்ச்சி அவதானிக்கப்பட்டது.

**அட்டவணை 2**

**மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியின் பெயரளவு வளர்ச்சி வீதங்கள் - 2014(2)(3) மற்றும் 2015(3)**

| மாகாணம் | சதவீதம் | |
|---|---|---|
| | 2014(2)(3) | 2015(3) |
| மத்திய | 7.2 | 7.1 |
| கிழக்கு | 11.1 | 10.9 |
| வடமத்திய | 10.6 | 12.1 |
| வடமேல் | 10.4 | 5.9 |
| வடக்கு | 7.5 | 12.1 |
| சப்பிரகமுவ | 6.6 | 9.9 |
| தென் | 13.3 | 5.7 |
| ஊவா | 11.5 | 5.4 |
| மேல் | 7.6 | 5.8 |
| **இலங்கை** | **8.9** | **7.0** |

2. திருத்தப்பட்டது 3. தற்காலிகமானது

**மாகாண ரீதியான மொ.உ.உற்பத்திக்கு துறைவாரியான பங்களிப்புக்கள்**

5) மாகாணங்களின் மாகாண ரீதியான மொ.உ.உற்பத்திக்கு துறைவாரியாக வழங்கப்பட்ட பங்களிப்பு அட்டவணை 3இல் தரப்பட்டுள்ளது. மாகாண ரீதியான மொ.உ.உற்பத்திக் கட்டமைப்பில் மாகாணங்களுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. வேளாண்மைத் துறை மேல் மாகாணத்தின் மொ.உ.உற்பத்தியில் 1.7 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் இது மற்றைய மாகாணங்களின் மொ.உ.உற்பத்தியில் 9.0 சதவீதத்திலிருந்து 16.3 சதவீதம் வரையான வீச்சிற்கு வகைகூறியது. 2015இல் வடக்கு, வடமேல், வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் மாகாண ரீதியான மொ.உ.உற்பத்திக்கு வேளாண்மைத் துறையின் பங்களிப்பு அதிகரித்த வேளையில் மற்றைய அனைத்து மாகாணங்களிலும் இதன் பங்களிப்பு வீழ்ச்சியடைந்தது. 2015இல் மாகாண ரீதியான மொ.உ.உற்பத்திக்கு கைத்தொழில் துறையின் பங்களிப்பு மேல் மாகாணத்தில் மிக உயர்வாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்ட வேளையில் மிகக் குறைந்த பங்களிப்பு வட மாகாணத்திலிருந்து பதிவுசெய்யப்பட்டது. 2015இல் வடக்கு, கிழக்கு, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களின் கைத்தொழில் துறைக்கான பங்களிப்பு வீழ்ச்சியடைந்த வேளையில் மற்றைய அனைத்து மாகாணங்களினதும் பங்களிப்பு அதிகரித்தது. 2015இல் பணிகள் துறை மிக ஆதிக்கம் செலுத்தும் துறையாக விளங்கி மாகாணங்களிடையே மாகாண ரீதியான மொ.உ.உற்பத்திக்கு 49.0 மற்றும் 60.6 சதவீதத்திற்கிடையிலான வீச்சிற்கு வகைகூறியது. 2015இல் பணிகள் துறையிலிருந்தான பங்களிப்பு தென், கிழக்கு, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களில் அதிகரித்த வேளையில் இது மற்றைய அனைத்து மாகாணங்களிலும் வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 3

மாகாணங்களின்படி மொ.உ.உற்பத்தி உள்ளமைப்பு(4)

| மாகாணம் | வேளாண்மை | | கைத்தொழில் | | பணிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 |
| மத்திய | 10.9 | 10.8 | 21.7 | 21.8 | 60.6 | 60.2 |
| கிழக்கு | 12.9 | 12.1 | 31.8 | 31.7 | 48.5 | 49.0 |
| வடமத்திய | 13.4 | 13.8 | 20.7 | 22.0 | 59.1 | 57.0 |
| வடமேல் | 10.8 | 12.6 | 29.6 | 27.2 | 52.9 | 53.1 |
| வட | 13.6 | 15.0 | 18.7 | 17.2 | 60.9 | 60.6 |
| சப்பிரகமுவ | 9.3 | 9.0 | 24.2 | 24.6 | 59.7 | 59.3 |
| தென் | 14.5 | 13.2 | 23.2 | 23.9 | 55.6 | 55.7 |
| ஊவா | 14.3 | 16.3 | 25.2 | 21.2 | 53.8 | 55.4 |
| மேல் | 2.0 | 1.7 | 33.8 | 34.6 | 57.4 | 56.5 |
| **இலங்கை** | **8.0** | **8.1** | **28.6** | **28.5** | **56.7** | **56.3** |

(4) உற்பத்திகள் மீதான வரிகள் மற்றும் உதவுதொகைகளுக்கான சீராக்கங்கள் நீங்கலாக (மொ.உ.உ = அடிப்படை விலைகளில் சேர்க்கப்பட்ட மொத்தப் பெறுமதி + உற்பத்தி மீதான அனைத்து வரிகள் - உற்பத்தி மீதான அனைத்து உதவுதொகைகள் கொண்ட தொகை

**தலைக்குரிய வருமானம்**

6) மேல் மாகாணத்தின் தலைக்குரிய மாகாணம் 2015இன் தேசிய தலைக்குரிய வருமானத்தினைவிட 1.4 மடங்கு அதிகமானதாகும். எனினும், மேல் மாகாணத்தில் தலைக்குரிய வருமான விகிதம் 2014இலிருந்து 2015 வரையான காலப்பகுதியில் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களின் தலைக்குரிய வருமான விகிதம் அதிகரித்த வேளையில் மற்றைய மாகாணங்களில் தலைக்குரிய வருமான விகிதம் ஊவா மாகாணம் தவிர்ந்த மற்றையவற்றில் மாற்றமின்றிக் காணப்பட்டது.

வரைபடம் 2

மாகாணங்களின்படி தலைக்குரிய வருமான விகிதம்

